# 8-வது ஆன்றோர் குடி அமர்வு 29 – 30 ஆகஸ்ட் 2022

## தியான ஆசிரமம், சென்னை - பதிவுகள்

இந்த ஆண்டின் சிறப்பு நிகழ்வாகப் பழங்குடி இயக்குநர் திரு. அண்ணாதுரை அவர்களுடன் கலந்துரையாடல் அமர்வு நடைபெற்றது.

### I 2006 பழங்குடி வன உரிமைச் சட்டம் :

1. 2006 பழங்குடி வன உரிமைச் சட்டத்தின் உயிர்நாடி 'வனக்குழுக்கள்' தாம் என்று தானும், அரசு அதிகாரிகளும் கருதுகிறார்கள் என்பதை திரு. அண்ணாதுரை உயர்த்திக் கூறினார்.

2. கீழ்வரும் 14 மாவட்டங்களில் இந்த ஊர் 'வன உரிமைக 'குழு' க்களின் உறுப்பினர் விவரங்களை மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் பழங்குடி நலத் துறையே வெளியிட வேண்டும் என்று குடி அமர்வு அரசிடம் கோரிக்கை வைத்தது.

3. சற்றொப்ப 100 வன உரிமைக் குழுக்கள் ஆண்டுக்கு 4 முறை கூடுவதற்கு ஒரு குழுவிற்கு ஒரு கூட்டத்திற்கு ரூ5000 வீதம் நிதி ஒதுக்கப் பழங்குடி நலத்துறையிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. ரூ5000*4= ரூ20000*100 =ரூ20,00,000 (ரூ 20லட்சம்/ ஆண்டு).

4. 10 மாவட்ட உரிமைக் குழுவிலுள்ள பழங்குடி உறுப்பினர்களை மாநில அளவில் கூட்டிக் கலந்தாய்வு செய்ய வேண்டும். ஆண்டுக்கு இருமுறை வெவ்வேறு 10 மாவட்டங்களைச் சார்ந்த உறுப்பினர்களை அழைக்கலாகும். ஒவ்வொரு உறுப்பினர்க்கும் பயணப்படியாக ரூ2000/மும், தினப்படியாக ரூ.1000/-மும் ஆக ரூ.3000/-வழங்க வேண்டும். ரூ.3000*30பேர் =ரூ.90,000*2 கூட்டம் =ரூ 1,80,000/ அல்லது ரூ.2,00,000 ஆண்டுச் செலவு.

### II பழங்குடித் துறையில் பழங்குடிப் பணியாளர்கள்:

பழங்குடிப் பள்ளிகளிலும் பழங்குடித் துறையிலும் அனைத்துப் பணிகளும் பழங்குடிகளுக்கே வழங்கப்பட வேண்டும்.

### III தனியார் நிறுவனங்களுடன் வேலைவாய்ப்பு முகாம்

ஆண்டுக்கு நான்கு முறையாவது தனியார் நிறுவனங்களைக் கூட்டிப் பழங்குடிகளாகிய ஆன்றோர்க்கு வேலைவாய்ப்பு முகாம்களைப் பழங்குடித் துறை ஏற்பாடு செய்ய வேண்டும்.

### IV அழியா நிலை ஆன்றோர்த் திட்டங்கள் (PVTG)

அழியா நிலை ஆன்றோர்த் திட்டங்களுக்கான (PVTG) கலந்தாய்வை வரும் செப்டம்பர் திங்களில் ஊட்டியில் நடத்தப் பழங்குடி இயக்குனர் உறுதி தெரிவித்தார்.

## V சிறுவனப் பொருட்கள்:

சிறுவனப் பொருட்களின் மீதான வன உரிமைக் குழுக்களுக்கான உரிமைகளை முறையாக வழங்க வேண்டும். நீலகிரியிலும், ஈரோட்டிலும், வால்பாறையிலும், கொல்லிமலையிலும் உள்ள ஒன்றியங்களில் ஒன்றியத்திற்குப் பத்து வன உரிமைக் குழுக்களுக்கு மேல் வராமல் வனக் குழுக்கள் திருத்தி அமைக்கப்படலாம். இந்தபத்துக் குழுக்களுக்கும் ஒதுக்கக் காடுகளின் எல்லைகள் வகுத்துத் தரப்படவேண்டும். இந்த ஒன்றியப் பரப்பிற்குள்ளும் இதைச் சுற்றியுமுள்ள ஒதுக்கக் காடுகளின் முழுப்பரப்பும் இந்த பத்துக் குழுக்களுக்குப் பிரித்து வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு குழுவும் அவரது பகுதி ஒதுக்கக் காடுகளில் உள்ள அனைத்து சிறுவனப் பொருட்களையும் சேகரம் செய்வும், அனுபவிக்கவும், விற்கவும், தலைச் சுமையாகவோ வண்டிகளிலோ ஏற்றிச் செல்லவும் அவர்களுக்குப் பூரண உரிமை உறுதி செய்யப்பட வேண்டும். வனத்துறையோ வேறு எந்தத் துறையோ குறுக்கீடு செய்யலாகாது.

## VI பணிகளில் ஆன்றோர்

பழங்குடித் துறையில் அலுவலக உதவியாளர், உதவியாளர், கண்காணிப்பாளர் போன்ற அரசுப் பணி இடங்களை உருவாக்குவதற்குப் பதிலாக 100 பழங்குடிப் பற்றாளர்களை மாதம் ரூ.25,000/- ஊதியத்தில் அமர்த்தலாம். அனைவரும் அந்தந்த ஊரைச் சார்ந்தவராகவும், அந்தந்தப் பழங்குடியைச் சார்ந்தவராகவும், பட்டம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். ஒவ்வொருவரும் நூறு குடும்பங்களுடன் தொடர்புகொண்டு அவர்களுக்கான மேம்பாடுகளைக் கொண்டுவரக் கூடிய பணிகளை ஆற்றுவார். 50% பெண்களாக இருத்தல் வேண்டும்.

## VII பழங்குடி பள்ளிகளைப் மேல் உயர்த்தல

பழங்குடிப் பள்ளிகளைப் பழங்குடித் துறையிலிருந்து வேறு எந்த முகமைக்கோ, துறைக்கோ மாற்றும் எண்ணத்தை ஆன்றோர் குடி அமர்வு கடுமையாக எதிர்க்கிறது. இந்தப் பள்ளிகளில் மேல் நிலைப் பள்ளிகளை ஆசிரியர்களைக் கொண்டே நிருவகிக்கும் கருத்துரவை துவக்கப் பள்ளிக்களைப் பழங்குடிப் பட்டதாரிகளைக் கொண்டே உதவி பொறும் பள்ளி ஆன்றோர் மன்றம் அரசுக்குச் சமர்பித்துள்ளது இதன் வழி மாற்றங்களை மேற்கொண்டு பள்ளிகளை மேம்பாடுத்த வேண்டப்படுகிறது.

## VIII உயர் கல்வியில் ஆன்றோர்

1. போஸ்ட் மெட்ரிக்கல்விக் கொடை பற்றிய தகவல்களைப் பரப்புவதற்கு பழங்குடி அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்கப்பட வேண்டும்.

2. பொறியியல் கல்லூரியில் 2020 - 21 இல் மொத்தம் 660 பழங்குடியினர் சேர்ந்துள்ளனர். கல்லூரிவாரியான புள்ளிவிவரம் தனியே தரப்பட்டுள்ளது. இது மொத்தச் சேர்க்கையில் 0.5% தான் தேறுகிறது.

3. மருத்துவம், வேளாண்மை, சட்டம் போன்ற தொழில் பிரிவுகளில் சேரும் பழங்குடியின் புள்ளி விவரத்தைப் பழங்குடி இயக்குநர் ஆண்டாண்டு வெளியிட வேண்டும்.

## IX ஆன்றோர்க்குக் குடியிருப்புகள்

1. இருளர், காட்டுநாயக்கர், ஆதியர் ஆகிய தரைவாழ் பழங்குடியினருக்குத் தனித்திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

2. ஈரோடு, வால்பாறை, கொடைக்கானல், பேச்சிப்பாறை வாழ் பழங்குடியினருக்குத் தனித்திட்டம் தேவை.

3. தரைவாழ் பழங்குடியினருக்கு செங்கைகாயாரம்பு-இல் கட்டப்பட்டுவருவதைப் போன்ற அடுக்குமாடி வீடுகள் வழங்கப்பட வேண்டும்.

## X சுழற்சி முறையில் மாற்றம்

தற்போது உள்ள சுழற்சி முறையில் (ROSTER) பழங்குடிக்கான இடம் 49-இல் வருகிறது. இதனால் பணி இடங்கள் குறைவாக உள்ள பல பணிக்களும் பழங்குடியினருக்கு 50 ஆண்டுகளுக்கு மேல் ஆக, அவர்களைப் வாய்ப்பு பெறுவத்திற்கு காத்திருக்க வேண்டி உள்ளது. ஆகவே சுழற்சி முறையில் முதல் இடம் பழங்குடிக்கு வழங்கப்பட வேண்டும்.

தேதி: 06.09.2022
இடம்: சென்னை

அருட்பணி.கி.ஜான்குமார்,
இயக்குநர்,
சமூகக் கண்காணிப்பகம்,
kumar@swtn.org
9444469685

இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப (ஓய்வு),
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிறுவனர்- பாலம், அகம், அம்பு – தமிழ்நாடு,
rcg1952@gmail.com
9444045215